**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.154/2025**

**நாள் : 26.03.2026**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.வெங்கடேசன் | வயது | : | 52 |
| ஊர் | : | கலந்திரா | தொழில் | : | விவசாயம் |
| வட்டம் | : | வாணியம்பாடி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் எனது ஊர்க்காரர் ஆவார். விபத்து நடந்த சமயத்தில் இறந்தவர் பயணித்த அதே ஆட்டோவில்தான் நானும் பயணித்தேன் என்றால் சரிதான். இறந்தவர் பெயர் சின்னபையன். விபத்தில் இறந்தவர் கம்பிமீது அமர்ந்திருந்தார் என்றால் சரியல்ல, சீட்டில்தான் அமர்ந்திருந்தார். சின்னபையன் விழுந்தபிறகு அவரை தூக்கிய சமயத்தில்

எனக்கும் அடிபட்டது. ஆட்டோ போய்க்கொண்டிருந்தபோது விழுந்தாரா அல்லது நிறுத்தியபோது விழுந்தாரா என்றால் ஆட்டோ பிரேக் போட்டு நிறுத்த முற்பட்டதில் கவிழ்ந்துவிட்டது. அவ்வாறு ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்கமூலத்தில் ஆட்டோ வேகமாக சென்ற நிலையில் எங்களுடன் பயணித்த சின்னபையன் தலைகுப்புற விழுந்துவிட்ட நிலையில் நாங்கள் கூச்சலிடேவோ ஆட்டோ ஓட்டுநர் ஆட்டோவை நிறுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனவே கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆட்டோ வேகமாகத்தான் போனது. வேகமான போன ஆட்டோ பிரேக் போட்டதில் திடீரென கவிழ்ந்து விழுந்துவிட்டதாக சாட்சி கூறுகிறார். காவல் துறையினர் விசாரணையில்கூட ஆட்டோ கவிழ்ந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆட்டோவில் உள்ள கம்பியை சரியாக பிடிக்காத நிலையில்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சின்னபையனின் அஜாக்கிரதைதான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் பயணித்த மற்றொருவரின் பெயர் சிகாமணி. அவருக்கு இந்த விபத்தில் அடிபடவில்லை. ஆட்டோ கவிழ்திருந்தால் மூன்றுபேருக்கும் அடிபட்டிருக்கும் என்றும், அவ்வாறில்லாததால்தான் சின்னபையனுக்கு மட்டும் அடிபட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.